புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed
ISSN : 2456-821X
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/03 - March 2023

# தமிழ் ஐம்பெருங்காப்பியங்களில் வழி அறியலாகும் ஒப்பனைக் கலைகள்

**ஆய்வாளர்**
**பசித்ராதேவி**
*முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்),*
*சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூ (ம)ரி,*
*திருவண்ணாமலை மாவட்டம்.*

**நெறியாளர்**
**முனைவர் கு.ரமேஷ்**
*உதவிப்பேராசிரியர்*
*சண்முகா தொழிற்சாலை கலை மற்றும் அறிவியல் கல்லூரி*
*திருவண்ணாமலை.*

முன்னுரை

பண்டையக்கால தமிழர்கள் நாகரிகத்திலும் பண்பாட்டிலும் தலைசிறந்து விளங்கினர். பல்வேறு கலைகளை வளர்த்து தமது வாழ்வியலை அழகுறப் பண்படுத்தி, செம்மையாக வாழ்ந்த இனம் நமது தமிழினம். மனிதனுடைய மனதில் உணர்ச்சியை எழுப்பி அழகையும், இன்பத்தையும் அளிக்கும் ஆற்றல் கலைகளுக்கு உண்டு. மனிதன் தன்னுடைய அறிவினாலும், மனோபாவத்தினாலும், கற்பனையினாலும் கலைகளைப் படைத்து அவற்றின் மூலமாக அழகையும், அதன் வழியாகப் பெறப்படும் இன்பத்தையும் பெற்று மகிழ்கின்றான்.

அழகு பார்ப்பவர்களுக்கு ஈர்ப்பையும், மனதிற்கு சந்தோஷத்தையும் கொடுத்து மகிழ்விக்கின்றமையால் நாகரீகப்பண்பாட்டு வளர்ச்சி பெற்ற பண்டைய தமிழ் மக்கள் அழகுக்கலைகளைப் போற்றி, பேணி வளர்த்தனர். அழகுக்கலையை விரும்பாத மனிதன் என்று எவருமில்லை. பண்டையக் காலத்தமிழகத்தில் கலைகள் பல செழித்து வளர்ந்தன. அதில் ஒப்பனைக்கலையுமொன்று.

தமிழ் மக்களின் அழகியல் உணர்ச்சியையும், அவர்களின் கலைத்திறனையும் புலப்படுத்துவது ஒப்பனைக்கலை என்பர். ஒருநாட்டு மக்களின் அழகு உணர்ச்சியின் அளவுகோலாகவும், அந்நாட்டின் செல்வச் செழிப்பைக் காட்டும் அளவீடாகவும் அமைவது ஒப்பனைக்கலையாகும்.

இவ்வாய்வு கட்டுரை ஐம்பெருங்காப்பிய இலக்கியத்தின் துணைக்கொண்டு, தமிழிலுள்ள பிற இலக்கியச் சான்றுகளின் துணையுடன் தமிழரின் ஒப்பனை கலைத்திறனை ஆராய்ந்து அறிய விளைகிறது, மேலும், காப்பிய இலக்கியத்தைப் படைத்த ஆசிரியன் தான் வாழ்ந்த காலத்திய நாகரீகம், பண்பாடு, கலை மற்றம் கலாச்சாரம் ஆகியவற்றையும் சேர்த்தே தமது நூலில் படைத்துச் சென்றுள்ளனர். அவ்வாறு அவர்கள் கூறியுள்ள அழகுக்கலைகளில் ஒப்பனைக்கலைகள் பற்றிய தரவுகளை அடிப்படையாகக் கொண்டு தமிழர்களின் ஒப்பனைக்கலைப் பற்றிய செய்திகளையும், ஒப்பனை செய்வதற்கு பயன்படுத்திய ஆடைகள், அணிகலன்கள், மலர்மாலைகள், பற்றிய செய்திகளையும்இ மகளிர்கள் தங்கள் முக ஒப்பனைக்கு மேலும் அழகுப்படுத்தப் பயன்படுத்தப்பட்ட வாசனைப்பொடிகள் (சுண்ணப்பொடிகள்), திலகம் மற்றும் திரவச்சாந்துகள் பற்றியச் செய்திகளையும் ஆராய்ந்து அறிய இவ்வாய்வு கட்டுரை முற்படுகிறது.

கலைகள்

கலைகள் பல செழித்து வளர்ந்த தமிழகத்தில் நுண்கலைகள் எனப்படும் கட்டிடக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, நடனக்கலை, ஒப்பனைக்கலை ஆகிய அழகுக்கலைகள் போற்றி வளர்க்கப்பட்டன. சங்க காலத்திலும், அதற்கு பிறப்பட்ட காப்பியக்காலத்திலும் தமிழகத்தில் இக்கலைகள் சிறந்து விளங்கியமையை தமிழ்க் காப்பியங்கள் கூறுகின்றன. அழகுக்கலைக்கு இன்கலை என்றும், கவின்கலை என்றும், நற்கலை என்றும் வேறுபெயர்கள் உண்டு. டாக்டர் மா. இராசமாணிக்கனார் (Dr.M.Raasamanikkanar) தமது பத்துப்பாட்டாராய்ச்சியில் ஓவியக்கலை, சிற்பக்கலை, இசைக்கலை. நடனக்கலை ஆகியவற்றையே அழகுக்கலைகள் என்கிறார். அவற்றுடன் ஒப்பனைக்கலைப் பற்றியச் செய்திகளையும் ஆங்காங்கே கூறியுள்ளார்.

ஒப்பனைக்கலை

பழங்காலத்தில் ஒப்பனைக் கலை மிகவும் சிறந்து விளங்கியது. தமிழரின் அழகியல் உணர்ச்சியையும்இ கலைத்திறனையும், செல்வ வளத்தையும் புலப்படுத்துவது ஒப்பனைக்கலை என்பர். அழகில் சற்றுக்குறைந்தவர்கள் தங்களை அழகுடையவர்களாக அழகுப்படுத்திக் கொள்ளவும். இயல்பாகவே அழகுடையவர்கள் தம்மை மேலும் அழகுடையவர்களாக ஆக்கிக் கொள்ளவும் உறுதுணையாவது ஒப்பனைக்கலை. ஒப்பனைக்கலையானது ஒப்பனை செய்து கொண்டவர்களுக்கு மனமகிழ்ச்சியும், காண்பவர்களின் கண்களுக்கு கண்கவர்ச்சியும் ஏற்படுத்துகின்றது.

சங்க காலத்தில் மகளிரைப் போல் ஆடவரும் ஒப்பனை செய்து கொள்வதிலும்இ தொய்யில் எழுதிக் கொள்வதிலும் ஆர்வங்காட்டினர். ஒப்பனை செய்துக்

*கொள்வதற்குமுன் நன்னீரால் குளித்து உடலைத் தூய்மைப்படுத்திக் கொண்டனர் என்பதனை சிலப்பதிகாரம் மாதவி நீராடிய விதம் குறித்து கூறியுள்ளது.*

*"பத்துத் துவரினும், ஐந்து விரையினும்,*
*முப்பத்து – இருவகை ஓமாலி கையினும்,*
*ஊறின நல் நீர், உரைத்த நெய் வாசம்,*
*நாறு இருங் கூந்தல் நலம் பெற ஆட்டி*
*புகையின் புலர்த்திய பூமென் கூந்தலை"1 (சிலம்பு-கடலாடு-76-79)*

*'ஊடல் கொண்டிருந்த கோவலன் உவப்புக் கொள்ளுமாறு மாதவி தன்னைப் பலவகையாகவும் புனைந்து கொள்ளத் தொடங்கினாள். பத்து வகைப்பட்ட துவர்இ ஐந்து வகைப்பட்ட விரை, முப்பத்திரண்டு வகைப்பட்ட ஓமாலிகை என்னும் நறுமணப் பொருள்களைத் தூய நீரில் ஊற வைத்து. பின்னர் அந்நீரைக் காய்ச்சி, அந்த நல்ல நீராலே, வாசநெய் மணங்கமழும் தன் உடலையும், கரிய கூந்தலையும் நலம்பெறுமாறு தேய்த்துக் கழுவி நீராடி, அகிற்புகையில் கூந்தலை உலர்த்தினாள். அதன் பின்னர் அதில் கஸ்தூரிக் குழம்பைப் பூசி, தன்னை அணிகலன்களால் அழகுற ஒப்பனைச் செய்து கொள்கிறாள் என்கிறது சிலப்பதிகாரம்.*

*ஒப்பனையானது தலையிலிருந்து பாதம் வரை படிப்படியாகச் செய்யப்படுவதாகும். இதில் ஆடை, அணிகலன்கள் அணிதல், கூந்தல் ஒப்பனை, மலர்சூடுதல், மாலையணிதல், முகவொப்பனை, நறுமணச்சாந்துகள், வண்ணப்பொடிகள் பூசிக்கொள்ளல் ஆகியன முக்கிய பங்கு வகிக்கின்றன.*

*ஆடை*

*பண்டைய தமிழ் மக்கள் உடலை மறைத்தற்காக மட்டுமின்றி அழகுக்காகவும் ஆடைகளை உடுத்தினார்கள். பண்டையக்கால தமிழகத்தில் பட்டு நூலினாலும், பருத்தியினாலும், நாரினாலும், எலிமயிர் முதலியவற்றினாலும் ஆடைகளை நெய்து அழகுற உடுத்தினர். பண்டையத் தமிழர்கள் பல்வகையான ஆடைகளை அணிந்தனர். அவை பொன்னாடை, பட்டாடை, பூவாடை, மேலாடை, படம், மெய்ப்பை, வட்டுடை, தாளிதம், ஈரணி, கச்சை என்பனவாகும்.*

*"பட்டினும், மயிரினும், பருத்தி நூலினும்*
*கட்டும் நுண்வினைக் ……………………"2 (சிலம்பு- இந்திரவிழா-16-17)*

*பட்டு நூலைக் கொண்டு நெய்யப்பட்ட இந்த மெல்லிய பட்டாடையை கார்காலத்தில் மகளிர் அரையிலே உடுத்திக்கொண்டனர். பட்டாடைகளிலுள்ள கொட்டைக்கரை மிகவும் நேர்த்தியாகவும், அழகாகவும் அமைக்கப்பட்டிருந்தன என்கிறது சிலப்பதிகாரம். இந்த ஆடையானது கருஞ்சிவப்பு நிறத்தில் பூ வேலைப்பாடுடன் அழகுற நெய்யப்பட்டமையால் இதற்கு அரத்தம் பூம்பட்டு என்று கூறுகின்றனர் (Arumbhathauraikarar- Pg-52) அரும்பதவுரைகாரர்.*

திருத்தக்கதேவர் தமது நூலில் குப்பாயம் எனும் ஒரு சட்டையைக் குறிப்பிடுகின்றார். இது பனிக்காலத்தில் குளிரிலிருந்து பாதுகாத்து கொள்ள அணியும் சட்டை வகையாகும்.

”நுதிமயிர்த் துகிற்குப்பாயம் புகுகெனத் தூக்கினானே”3 (சீவக -819)

என்கிறார். இப்பாடலடிக்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர் எலிமயிரற் செய்த சட்டை என்பர் என்று கூறுகிறார். இவ்வாடை எலியினது கூர்மையையுடைய மயிரால் நெய்த ஆடையால் ஆக்கிய சட்டையாகும். எலிமயிரைக் செய்துள்ளமையால் இந்த சட்டை மிகுந்த வெப்பமமுடையது. அதனுள்ளே காற்று சிறிதும் புகாது. ஆதலால் கடும் குளிரிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ள பெருமளவில் இவ்வகைச் சட்டையை மக்கள் அணிந்துக் கொண்டனர். மென்மை உடையது என்பதனால் அனைவராலும் விரும்பி அணியப்பெற்றது குப்பாயம் எனும் சட்டை. கேரள மக்கள் இன்றும் இச்சட்டையை குப்பாயம் என்றே அழைக்கின்றனர்.

பலவிதமான பூக்காள் நிறைந்த வேலைப்பாடுகள் மிக்க ஆடைகளைத் தமிழர் நெய்து அணிந்து தம்மை அழகுப் படுத்திக்கொண்டனர். அதனை சிலம்பு,

”பிறங்கிய முத்தரை முப்பத்து – இரு காழ்
நிறம்கிளர் பூந்துகில் நீர்மையின் உடீஇ”4 (சிலம்பு- கடலாடு-87-88)

என்கிறது. இங்கு மாதவி விரிசிகை என்னும் முத்தால் ஆன அணிகலன் முப்பத்திரண்டு வடங்களால் ஆனவை. இந்த மேகலையை பலவிதமான பூ வேலைப்பாடுகளால் உருவாக்கிய மென்மையான நீலநிறப் பூந்துகிலின் மேலே அணிந்து கொள்கிறாள். நெடுநல்வாடையும் “பூந்துகில் மரீஇய கோட்டல்குல்5 (Natunalvadai-145) என்று குறிப்பிடுகின்றது. மேலும் பெண்கள் மேலாடை அணிந்திருந்தனர் என்கிறார் திருத்தக்கதேவர்.

”இட்ட உத்தரியம் மெல்லென்றிடைச் சுவல்வருத்த”6 (சீவக-472)
“வந்து பணிவார்ந்து முலைக்கலிங்கமது நனைப்ப”7 (சீவக-1785)

ஆகிய பாடலடிகளின் வழி அறியலாம். இவை மட்டுமின்றி அக்கால தமிழர் கோசிகம் முதலாக பணிப்பொத்தி ஈறாக முப்பத்தாறு வகையான ஆடைகளை அணிந்திருந்தனர் என்று தமது சிலப்பதிகார உரையில் அடியாரக்குநல்லார்(AdiyaarukkuNallar, Pg-375) வரிசைப்படுத்திக் கூறியுள்ளார்.

அணிகலன்கள்

ஒப்பனையில் ஆர்வமுடைய தமிழ் மக்கள் கண்ணுக்கு இனிய காட்சியைத் தரும் பலவகையான தளிர்களையும்இ மொட்டுகளையும், மலர்களையும், கொடிகளையும் காதுகளில் சொருகியும், கழுத்தில் அணிந்து கொண்டும், கைகளிலும் தலையிலும் சுற்றிக் கொண்டும் தம்மை அலங்கரித்துக் கொண்டனர். நாகரிகம் வளர வளர இரும்பு, பித்தளை, செம்பு, ஈயம், வெள்ளி, பொன் முதலிய உலோகங்களினாலும், முத்து, மாணிக்கம்,

பவளம், மரகதம், இன்னும் பிற நவமணிகளினாலும் அணிகலன்கள் செய்து தம்மை அணிச்செய்து கொண்டனர்.

மாதவி நீராடியபின் தன் கூந்தலை மணப்புகையிட்டு ஈரம் நீங்க உலத்தினாள். கூந்தலை ஐந்து வகிராக பிரித்து கஸ்தூரிக் குழம்பினை ஊட்டினாள். மாதவி தன்னுடைய மென்மையான பாதத்தில் பல்வேறு விதமான அணிகலன்களை அணிந்தாள் என்று சிலப்பதிகாரம் கடலாடு காதையில் கூறப்பட்டுள்ளது.

"நலத்தகு மெல்விரல் நல்அணி செறீஇ
பரியகம், நுபுரம், பாடகம், சதங்கை
அரியகம், காலுக்கு அமைலுற அணிந்து"8 (சிலம்பு-கடலாடு-83-85)

நன்மைமிக்க மென்மையான விரல்களிலே நல்ல கணியாழிகளை அணிந்து கொள்கிறாள். செம்பஞ்சுக் குழம்பு ஊட்டிய காலுக்குப் பொருத்தமுறும் படியாகப் பாதசரம்இ நூபுரம், பாடகம், கதங்கை, அரியகம் முதலியவற்றை மிகவும் நேர்த்தியாகவும், அழகுடனும் அணிந்து கொண்டாள் மாதவி. இதனை

"குறங்கு செறிதிறள் குறங்கினிற் செறித்து"9 (சிலம்பு-கடலாடு-86)

தனது திரண்ட தொடைகளுக்குக் குறங்குசெறி என்னும் அணிகலனை அணிந்து கொண்டாள் என்று கூறும் சிலப்பதிகாரம் கோவலனின் ஊடல் தீரும் வகையில் இன்னும் பலவிதமான அணிகலன்களையெல்லாம் தனது உடலிலே புனைந்து கொண்டு அழகுற விளங்கினாள் மாதவி என்று கூறுகின்றது.

"தூமணித் தோள்வளை தோளுக்கு அணிந்து
மத்தக மணியோடு சயிரம் கடடிய
சித்திரச" சூடகம், செம்பொன் கைவளை,
பரியகம், வால்வளை, பவழப் பல்வளை
…………………………………… மாண்புற அணிந்து"10 (சிலம்பு-கடலாடு-90-108)

முப்பத்திரண்டு வடங்களால் செய்த விரிசிகையை மென்மையான பட்டு துகிலுடையின் மீது மேகலையாக உடுத்தினாள். அழகான கண்டிகையோடு பின்னிக் கட்டிய, தோள்வளையை தோள்களுக்கு அணியாக அணிந்தாள் மாதவி. மாணிக்க மணிகளுடன் வயிரங்கள் பதித்த சித்திரத் தொழிற்பாடு அமைந்த சூடகம், செம்பொன்னால் செய்த வளையல், நவமணி வளை, சங்குினால் செய்த வளை, பவழ வளை ஆகியவற்றை மெல்லிய மயிரினையுடைய தன் முன்கைக்குப் பொருத்தமுற அணிந்துக் கொண்டுள்ளாள்.

இவற்றோடு வாளைமீனின் திறந்த வாயை போன்ற நெளியும், முடக்கு மோதிரமும், மாணிக்க மோதிரமும், மரகதத்தாள் செறியையும் தனது காந்தள் மெல்விரல்களில் பாங்குற அணிந்து கொண்டாள். மேலும், வீரசங்கிலியோடு நுண்மையான சங்கிலியும், பூணப்படும் சரம் ஆகியவற்றைக் கழுத்திலே கிடந்த முத்து ஆரத்துடன் ஒருசேரப் அணிந்துக் கொண்டாள். இந்திர நீலத்துடன் வயிரத்தால் கட்டப்பட்டு அழகுப் பெற்ற குதம்பை என்னும் அணியைக் அழகிய காதின் உட்புறத்தே

அழகுற அணிந்து மாதவி ஒப்பனைச் செய்துக் கொண்டாள். காப்பியத் தலைவி கண்ணகி நீளவட்டமான காலணி சிலம்பு அணிந்திருந்தமையை சிலப்பதிகாரம் கூறுகின்றது.

பண்டையக்காலப் பெண்கள் சிலம்பு அணிந்து கொள்வது வழக்கம். சிலம்பு குழாய் போல் செய்யப்பட்டுஇ அதனுள்ளே முத்து அல்லது மாணிக்கப் பரல்கள் இடப்பட்டிருக்கும். கண்ணகி அணிந்திருந்த சிலம்பில் மாணிக்கப்பரல் இடப்பட்டிருந்தது. பாண்டிய மன்னனின் மனைவி கோப்பெருந்தேவியின் சிலம்பில் முத்துப்பரல் இடப்பட்டிருந்தது என்பதனை சிலப்பதிரம் வழக்குரை காதையின் வழியாக அறியலாம்.

கூந்தல் ஒப்பனை:

பண்டையக் காலத்தமிழ் பெண்கள் தம் கூந்தலைப் பேணி ஒப்பனைச் செய்து கொள்வதில்ஆர்வம் மிகக் கொண்டிருந்தனர். மாதவி தன் கூந்தலைத் தூய்மை செய்து கொண்ட முறையினை இளங்கோவடிகள்

”பத்துத் துவரினும்இ ஐந்து விரையினும்,
……………………………………………………………………………
நாறு இருங் கூந்தல் நலம் பெற ஆட்டி
புகையின் புலர்த்திய பூமென் கூந்தலை
வகைதொறும் மான்பதக் கொழுஞ் சேறுஊட்டி”11 (சிலம்பு-கடலாடு-76-80)

”வாச நெய்யுரைத்த மணங்கமழும் கரிய கூந்தலைப் பத்து வகையான துவர்களினாலும், ஐந்து விதமான விரைகளினாலும், முப்பத்திரண்டு விதமான ஓமாலிகையினாலும் ஊறின நீரில் நிறம் பெறக் கழுவினாள். தூய்மைச் செய்தக் கூந்தலைச் சந்தனம், அகில் முதலிய புகையினால் உலர்த்தி மணமுட்டினாள்”12 (**Elangovadigal, pg - 82**) என்று அழகாகவும், கலை நயம்படவும் பாடியுள்ளார்.

”தெய்வ உத்தியோடும் செழுநீர் வலம்புரி
தொய்யகம் புல்லகந் தொடர்ந்த தலைக்கணி
மையீரோதிக்கு மாண்புற அணிந்து”13 (சிலம்பு-கடலாடு-106-108)

மாதவி ஐந்து வகிராக பிரித்து கஸ்தூரிக் குழம்பினை ஊட்டி மணமமூட்டிய தன் கூந்தலில் செழுநீர், புல்லகம், தொய்யகம், வலம்புரி, தென்பல்லி, வடபல்லி, சீதேவி முதலிய தலையணிகளை நீண்ட தன் கூந்தலுக்கு அழகு தருமாறு அணிந்து ஒப்பனை செய்துக் கொண்டாள். மாதவியின் அலங்காரத்திலிருந்து அக்கால அணிகலன்கள்இ கூந்தல் பராமரிப்பு குறிப்புகள் போன்ற விவரங்கள் முதலியவற்றை அறிந்து கொள்ள முடிகிறது.

ஒப்பனையில் மலர்களும்இ மாலைகளும்

பல்வகை மணங்களையும் பல்வேறு வண்ணங்களையும் உடைய மலர்களையெல்லாம் மிகவும் விரும்பிக் கூந்தல் ஒப்பனைக் செய்யப்ட்டன. முடியுடை வேந்தர்களும், குறுநில மன்னர்களும், செல்வக்குடியில் பிறந்தவரகளும், மலர்களையும் மாலைகளையும் கொண்டு தம்மை அழகாக அலங்கரித்துக் கொண்டனர். மறவர், கானவர், மீனவர் என

அனைத்து தரப்பினரின் ஆண்களும்இ பெண்களும் மலர்களால் தம்மை பாங்குடன் அலங்கரித்துக் கொள்வதில் ஆர்வம் காட்டியுள்ளனர். பண்டைக் பெண்டிரேயன்றி ஆடவர்களும் மலர்களை விரும்பியதுடன், மலர்களை தலையில் சூடியும், மாலையாகத் தொடுத்து கழுத்தில் அணிந்தும் தம்மை ஒப்பனை செய்துக் கொண்டனர்.

சான்றாக" ஆறலைக் கள்வர்கள் வெண்கடம்பின் வெண்ணிறப் பூங்கொத்துகளைத் தம் சுருண்ட தலைமயிரில் அழகு பெறச் சூடிக்கொண்டனர்"14 (Aganaanuru – 127) என்று அகநானூறு கூறுகின்றது. மேலும், விடுபூ, தொடைப்பூ, காட்டுப்பூ என்னும் மூவகைப் பூக்கள் விற்கப்பட்டதாக சிலப்பதிகாரம் இந்திரவு விழா ஊரெடுத்த காதை உரையில்15 (U.V.Swaminatha Iyer – Pg-153) உ.வே.சா. கூறியுள்ளார்.

தொடுக்கப்பட்ட பூ மாலை, கண்ணி, தார், கோதை, சூட்டு வலயம், மோட்டு வலயம் என்றும், தளிரால் தொடுக்கப்பட்ட மாலை படலை மாலை என்றும் வகைப்படுத்தப்படுகின்றன. தலையில் அணிந்த மாலை கண்ணி எனவும், ஆடவர் கழுத்தில் அணிந்த மாலை தார் எனவும், பெண்கள் அணிந்த மாலை கோதை எனவும் அழைக்கப்படுகின்றன. வகிர்ப்பெடுத்த கூந்தலில் வெட்சி மலரின் இதழ்களைச் சூடிக்கொண்டனர். அவற்றிடையேஇ பசிய தண்டினையுடைய குவளை மலரின் இதழ்களைக் கிள்ளிச் சொருகினர். நற்றிணைத் தலைவி பல்வித மலர்களைக் கொண்டு தன்னை ஒப்பனை செய்து கொண்டாள். அவள் கூந்தலில் காட்டுமல்லிகைஇ பாதிரிஇ செங்கருங்காலி ஆகிய பல மலர்களைச் சூடியிருந்தமையை நற்றினையின் (Nattrinai) வழி மலர்களால் தங்களை அலங்கரித்து கொண்டுள்ளனர் என்பதனை அறியமுடிகிறது.

முகவொப்பனை

முக ஒப்பனை என்பது முகத்திலுள்ள கண், காது, மூக்கு, புருவம், நெற்றி, உதடு முதலிய உறுப்புகளின் ஒப்பனையாகவே அமைகின்றது. கண்களுக்கு மை தீட்டுதல்இ நெற்றிக்கு பொட்டு வைத்தல் அல்லது திலகம் இடுதல், முகத்தில் நறுமணச்சுண்ணம் பூசிக்கொள்ளல், புருவத்தை சிறிய வில் போன்று செதுக்கி, அதில் மெல்லிய மைப்பூசிக் கொள்ளல், வாயும், உதடும் சிவந்து இருப்பது அழகின் இலக்கணம் என்பதால் உதட்டுக்குச் சாயம் பூசிக்கொள்கின்றனர். இத்தகையை ஒப்பனைகள் ஏதுமின்றி இருந்த கண்ணகியைப் பற்றி இளங்கோவடிகள் கூறுகையில்

"கொடுங்குழை துறந்த வடிந்துவீழ் காதினள்
………………………………………………………………………………
செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் மறப்ப
பவளவாள் நுதல் திலகம் இழப்ப"16 (சிலம்பு – அந்திமாலை- 51-54)

என்றுக் கூறியுள்ளார். இதில் கண்ணகி காதுகளில் குழையை துறந்தும்இ கண்களுக்கு அஞ்சனம் மறந்தும்இ நுதல் திலகம் இழந்தும் இருந்தன என்பதனால் முக ஒப்பனை செய்யப்படவில்லை என்பதனை அறிந்துக் கொள்ளமுடிகிறது. மகளிர் விழிகளுக்கு மை

தீட்டியமையை ஐங்குறுநூறு ”உண்கண் பசப்பது எவன்கொல்”17 (Aigurunuru - Poem-16) என்றும், ”மடவரல் உண்கண்இ வாள்நுதல் விறலி”18 (Aigurunuru - Poem-21)என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன.

சுண்ணப்பொடியைப் பூசிக்கொள்ளல்

நறுமணச்சாந்துகளையும் சுண்ணப்பொடிகளையும் உடல் முழுவதும் பூசி ஒப்பனைச் செய்து கொள்ளும் வழக்கம் அக்காலத்தில் இருந்துள்ளன. சீவக சிந்தாமணியில் குணமாலைஇ சுரமஞ்சரி என்னும் இரண்டு பெண்களும் உயர்குடியைச் சார்ந்தவர்கள். செல்வச் செழிப்பும்இ கலையுள்ளமும் கொண்டவர்கள். இவர்கள் சுண்ணம் தயாரித்தலில் வல்லவர்கள். இருவருடைய சுண்ணத்தில் எவருடைய சுண்ணப்பொடி உயர்ந்தது என்பதை அறிய வேண்டுமென்றப் போட்டி எழுந்தது.

இருப்பெண்களின் தோழியர் சீவகனிடம் சென்று “உயர்ந்த சுண்ணத்தை உண்மையாக அறிந்து அண்ணல் சொல்க” என வேண்டிக் கொண்டனர். கோடையில் இடிக்கப்பட்டதால் குணமாலையின் சுண்ணப்பொடி, குளிர்காலத்தில் இடித்த சுரமஞ்சரியின் சுண்ணப்பொடியை விட உயர்ந்தது என்றான் சீவகன். அதனைத் தோழி ஒப்புக்கொள்ள மறுத்துஇ உரிய முறையில் மெய்ப்பிக்க வேண்டுமென்றாள். சீவகன் இரண்டு பொடிகளையும் இரண்டு கைகளிலும் வாங்கி அவற்றை விண்ணிலே தூவினான். சுரமஞ்சரியின் சுண்ணப்பொடி கீழே விழுந்தது. ஆனால் குணமாலையின் சுண்ணப்பொடியை வண்டுகள் விரும்பியுண்டன. சுரும்புகள் விரும்பும் சுண்ணப்பொடியே சிறந்தப் பொடி[19] என்பது (Civagaccinthamani Poem-894) மெய்ப்பிக்கப்பட்டது.

”எரிபிணிச் சுண்ணம் மின்னும் இருஞ்சிலை முத்தம்சேர்த்தி
திருமணி முலையின் நெற்றிச் சிறுபுறம் செறியத்தீட்டி
புரிமணி ஆகத்து அய்தா விரல்நுதி கொண்டு பூசி”20 (சீவக-625)

எனக் கூறுகிறது. இத்தகைய சுண்ணத்தை உடல் முழுவதும் பூசி ஒப்பனைச் செய்து கொண்டுள்ளனர். முகம், மார்பு, முதுகு என உடலெங்கும் சுண்ணப்பொடியைப் பூசி ஒப்பனைச் செய்துக் கொண்டதனை சீவக சிந்தாமணிப் பாடல் உணர்த்துகிறது. மேலும், முகத்திற்கு சுண்ணப்பொடியைப் பூசி ஒப்பனைச் செய்து கொண்டதை,

”விரலிற் கொண்ட வெண்ணிற நுண்தாது
விரகதிர் மதியின் விளங்கொளி அழிப்ப
நிறம்பெற உரிஞ்சி நேர்துகில் துடைத்தும்”21 (பெருங்கதை– 2.4.189-191.)

என்றுக் கூறுகிறது. ”விரலில் எடுத்துக்கொண்ட வெண்ணிற நுண்ணிய நறுமணப்பொடியினை முகத்தில் தடவித் திங்கள் ஒளியினும் மிக ஒளிபெறும்படி திறமுண்டாகத் தேய்த்தும், பின்னர் துகிலால் துடைத்தும் ஒப்பனை செய்தனர்” என்றுக் கூறும் சான்றுகளின் அடிப்படையில் சுண்ணப்பொடியை முகம், நெற்றி யென உடல் முழுவதும் பூசி ஒப்பனைச் செய்துக் கொண்டதனை அறிய முடிகிறது.

ஒப்பனையில் நறுமணச்சாந்துகள்

தமிழ் மகளிர் ஒப்பனைக்கு நறுமணப் பொருள்களைப் பயன்படுத்தியுள்ளனர். இயற்கையில் கிடைக்கும் பொருள்களான சந்தனம், அகில், தகரம், நறைக்கொடி, புழுகு, கஸ்தூரி முதலியவற்றையும், செயற்கையாகச் செய்யப்பட்ட சுண்ணம், பனிநீர், கற்பூரம், மணநெய் முதலியவற்றையும் பயன்படுத்தினர். நறுமணப் பொருட்களில் சிலவற்றை அரைத்துச் சாந்தாகவும், குழம்பாகவும், சிலவற்றை இடித்துச் சுண்ணமாகவும், சிலவற்றை எரித்துப் புகையாகவும், சிலவற்றை நெய்யாகவும் பயன்படுத்தினர் என்பதனை

”வண்ணமும் சுண்ணமும் தண்ணறுஞ் சாந்தமும்
பூவும் புகையும் மேவிய வரையும்
பகர்வனர் திரிதரும் நகர வீதியும்”22 (சிலம்பு-இந்திரவிழா–13-15)

எனும் சிலப்பதிகாரப் பாடல் வரிகள் இதனைத் தெரிவிக்கின்றன.

முடிவுரை

பண்டையக் காலத்தில் இயற்கையில் கிடைக்கும் பொருள்களான சந்தனம், அகில், தகரம், நறைக்கொடி, புழுகு, கஸ்தூரி இன்னும் பிற அழகு பொருட்களோடு, அழகுக்கு மேலும் அழகு சேர்க்கச் செயற்கையாகத் தயாரிக்கப்பட்ட சுண்ணம், பனிநீர், கற்பூரம், மணநெய் முதலியவற்றைப் பயன்படுத்தி தங்களை அழகுப்படுத்தி கொண்டனர். பட்டு நூலினாலும், பருத்தியினாலும், நாரினாலும், எலிமயிர் முதலியவற்றினால் நெய்த பொன்னாடை, பட்டாடை, பூவாடை, மேலாடை, படம், மெய்ப்பை, வட்டுடை, தாளிதம், ஈரணி, கச்சை முதலிய ஆடைகளை தங்களின் நிறத்திற்கு ஏற்ப தேர்ந்தெடுத்து அணிந்து கொண்டனர். மகளிர், அவ்வடைகளுக்கு ஏற்ற அணிகலன்களை மட்டுமே அணிந்தனர். ஒப்பனையில் ஆர்வமுடைய மகளிர் பலவகையான தளிர்களையும், மொட்டுகளையும், மலர்களையும், கொடிகளையும் கூந்தலில் சொருகியும், கழுத்தில் மாலையாக அணிந்தும் தம்மை அலங்கரித்துக் கொண்டனர். நாகரிகம் வளர்ச்சியினால் இரும்பு, பித்தளை, செம்பு, ஈயம், வெள்ளி, பொன் முதலிய உலோகங்களினாலும், முத்து, மாணிக்கம், பவளம், மரகதம், இன்னும் பிற நவமணிகளினால் ஆன அணிகலன்கள் அணிந்து தம்மை ஒப்பனைச் செய்து கொண்டனர். மாதவி நீராடிய பின் தன் கூந்தலை மணப்புகையிட்டு ஈரம் நீங்க உலத்தினாள். கூந்தலை ஐந்து வகிராக பிரித்து கஸ்தூரிக் குழம்பினை ஊட்டினாள். மாதவி தன்னுடைய மென்மையான பாதத்தில் பல்வேறு விதமான அணிகலன்களை அணிந்தாள் என்கிறது சிலம்பு. கண்களுக்கு மை தீட்டுதல், நெற்றிக்கு பொட்டு அல்லது திலகம் இடுதல், முகத்தில் நறுமணச்சுண்ணம் பூசிக்கொள்ளல், புருவத்தை சிறிய வில் போன்று செதுக்கி, அதில் மெல்லிய மைப்பூசிக் கொள்ளல், வாயும், உதடும் சிவந்து இருப்பதுதான் அழகு எனக் கருதி உதட்டுக்குச் சாயம் பூசிக்கொள்ளல் முதலிய ஒப்பனைகளை மகளிர் அனுதினமும் தவறாது செய்து வந்தனர். இதில் நெற்றிக்கு

பொட்டு அணிதல் மங்கலமாகக் கருதப்பட்டு அனைவராலும் நெற்றிக்கு பொட்டு அல்லது திலகமிட்டுக் கொண்டனர். அக்கால தமிழ் சமூகத்தில் பெண், ஆண்யென இருபாலரும் தங்களை பல்வெறு வகையாக ஆடை, அணிகலன்களாலும், மலர் மாலைகளாலும், நறுமணச்சாந்து, சுண்ணப்பொடிகளாலும் தங்களை சிறப்புற அலங்கரித்து ஒப்பனை செய்து கொண்டமையை மேற்கண்ட சான்றுகளின் வழி அறிந்து கொள்ள முடிகிறது.

***References;***


*U.V.Swaminatha Iyer (2008)- Cilappatikaram –U.V.SAA.Nool Nilaiyam Chennai India*
*U.V.Swaminatha Iyer (2008)- Manimekalai –U.V.SAA.Nool Nilaiyam, Chennai India*
*P.V.Somasuntaranaar- (1958) Civakacindamani, - TVU Library, Chennai India.*
*P.V.Somasuntaranaar- Perunkadhai, - TVU Library, Chennai India.*
*A.Narayanasamy iyar – Nattrinai - TVU Library, Chennai India.*
*M.Rajamanikkanar - (1980) Tamizhaka Kalaigal, Pari Nilaiyam Chennai, India*
*U.V.Swaminatha Iyer -Natunalvadai- (1986) –U.V.SAA.Nool Nilaiyam Chennai India*
*U.V.Swaminatha Iyer – Aingurunuru - (1986) –U.V.SAA.Nool Nilaiyam Chennai India*
*N.M.Veenkadasamy Naattar – Aganaanuru - TVU Library, Chennai India*